செய்தி வெளியீடு எண்.872 நாள்.17.10.2008

# ஆவின் நிறுவனத்தின் 7 ஆயிரத்து 138 பணியாளர்களுக்கு 5 கோடியே 59 இலட்ச ரூபாய் போனஸ் !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆவின் ஊழியர்கள் 7 ஆயிரத்து 138 பேருக்கு, 2007–2008ஆம் ஆண்டிற்கான 8.33 சதவிகித போனஸ் மற்றும் 11.67 சதவிகித கருணைத் தொகை மொத்தம் 5 கோடியே 59 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (17.10.2008) ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் பணிபுரியும் 2 ஆயிரத்து 394 பணியாளர்களும், 421 தற்காலிகப் பணியாளர்களும், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் 4 ஆயிரத்து 83 பணியாளர்களும் 240 தற்காலிகப் பணியாளர்களுமாக மொத்தம் 7 ஆயிரத்து 138 பணியாளர்கள் பயனடைவார்கள்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.